**தலைப்பு 266 – வவுனியா மாவட்டச் செயலகம்/ கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

---

(அ) வவுனியா

(ஆ) வெங்கல செட்டிக்குளம்

(இ) வவுனியா தெற்கு

(ஈ) வவுனியா வடக்கு

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

வவுனியா மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 28 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

---

மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 303.5 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 298.3 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாடுகளில் ரூபா 5.2 மில்லியன் அதாவது 1.7 சதவீதம் ஏற்பாடுகளில் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 155.4 | 150.5 | 4.9 | 3.2 |
| மூலதன | 148.1 | 147.8 | 0.3 | 0.2 |
| **மொத்தம்** | **303.5** | **298.3** | **5.2** | **1.7** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 22 அமைச்சுக்களிலிருந்தும் 18 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 747.30 மில்லியன் தொகையும் ரூபா 992.43 தொகையுமாக ரூபா 1,739.73 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாடுகளில் முறையே ரூபா 697.80 மில்லியன் தொகையும் ரூபா 783.88 தொகையுமாக ரூபா 1,481.68 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சேமிப்பு முறையே ரூபா 49.50 மில்லியன் மற்றும் ரூபா 208.55 மில்லியன் ஆக ரூபா 258.05 மில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்டது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

வவுனியா மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 26601 | 11 | 10.9 | 7 | 8.7 | 40 | 35.2 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 96.91 மில்லியன் ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வவுனியா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3.1 ஆம் பந்தி முதல் 3.13 ஆம் பந்தி வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 266 – வவுனியா மாவட்டச் செயலகம்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

வவுனியா மாவட்ட செயலகத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

03 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 15.8 சதவீதத்திற்கும் 28.77 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

**3.2.2 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

---

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மணிபுரம் கிராமத்தில் திவிநெகும அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவர்கள் என இனங்காணப்பட்ட 52 நலனாளிகளுக்கு ரூபா 9,000 வீதமும், 05 நலனாளிகளுக்கு ரூபா 4,400 வீதமுமாக ரூபா 490,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த நலன்கள் பெறப்பட்டமைக்கு கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டிலுள்ள கையொப்பத்திற்கும் சமூர்த்தி வங்கியிலிருந்து பணம் பெறப்பட்டமைக்காக சமர்ப்பிக்கப்பட்ட கையொப்பத்திற்கிடையே வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2014 நவம்பர் 07 ஆந் திகதிய MED/RD/DEV/2014 ஆம் இலக்க பொருளாதார அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் படி ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது அடிப்படை எடுகோளாக குறைந்த வருமானம் பெறுவோர்கள் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதும் அதற்கு முரணாக மணிபுரம் மற்றும் மரக்கரம்பளை கிராமங்களில் வசிக்கும் உயர் வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் (நிரந்தர தொழில் செய்கின்ற) விவாகமாகாத நபர்களுக்கும் நலனாக ரூபா 100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய DDD/Z6/MF/2014 ஆம் இலக்க திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் பிரதேச திவிநெகும அபிவிருத்தி உத்தயோகத்தர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் படி வீட்டுக்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம் அபிவிருத்தி செயற்திட்டம் திவிநெகும அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக அமுல்படுத்தப்பட வேண்டியமை அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் 4 பல்வேறு அமைப்புக்களுக்கு ரூபா 3,430,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதனால் குறைந்த வருமானம் பெறாத நலனாளிகளுக்கும் செயற்திட்டத்தின் பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த இரண்டு அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கும் ஏனைய திவிநெகும சங்கங்களின் நலனாளிகளுக்கு செலுத்தப்பட்ட பணத்தைவிட அதிகரித்த தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய DDD/Z6/MF/2014 ஆம் இலக்க திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் பிரதேச திவிநெகும அபிவிருத்தி உத்தயோகத்தர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைக்கப்பட்ட திவிநெகும அபிவிருத்திச் சங்கங்களில் இருக்கின்ற அங்கத்தவர்கள் நலனாளிகளாக இருக்க வேண்டிய போதிலும், கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடியிருக்காத ஏனைய பிரதேசங்களின் நபர்களுக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் மூலம் அரசாங்க நிதி சரியான முகாமைத்துவமின்றி வெளிச்சென்றிருந்தது. உதாரணமாக மஹறம்பாகுளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடியிருக்காத 61 நபர்களுக்கு ரூபா 457,500 தொகை செலுத்தப்பட்டிருந்தமை.

## 3.3 பொது வைப்புக் கணக்கு

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 997,959 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் (இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்) பல்வேறு செயற்பாடுகளுக்காக வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 400,000 நிதி உரிய பணிகளில் நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

------------------------------------------------------------------------------------------

26601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக இணக்கக் கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,174,681 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்படுகின்ற போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

## 3.5 இணக்கமின்மைகள்

---------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 108 மற்றும் 109 | 54,005 | 25 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய இழப்பீடுகளை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 94(1) | 3,526,163 | (i) வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியமர்த்தும் குடும்பங்களுக்காக குளங்களை புனரமைப்பிற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பல்வேறு நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய பட்டியல்களின் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கில் DGSA 8 பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| | 23,990 | (ii) 2014 ஆம் ஆண்டில் பல்வேறு பழுதுபார்த்தல்கள் மற்றும் கொள்வனவுகளுக்காக செலுத்தவேண்டிய பெறுமதி பொறுப்புகளாக உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2009 திசெம்பர் 9 ஆந் திகதிய 441 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3:5 ஆம் பந்தி | - | ஒவ்வொரு நிதியாண்டிலும் பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி அழிக்கப்பட வேண்டிய, பழுதுபார்க்கக்கூடிய, ஏலத்தில் விற்பனை செய்யவேண்டிய பொருட்கள் தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும், வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் 2013 ஆம் ஆண்டில் கைதவிர்க்கப்பட வேண்டியதாக உத்தேசிக்கப்பட்ட 61 பொருள் வகைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் 2014 பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்வதற்கு 2014 யூலை 10 ஆந்திகதி சபை நியமிக்கப்பட்டிருந்தது. |

(இ) அரச கணக்குகள் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 239/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை | 3,010,908 | மாவட்ட செயலகத்தில் ஏற்பட்ட சகல இழப்புக்களும் ஒதுக்கீட்டுக் கணக்கின் DGSA 7 படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

குளம் நவீனமயப்படுத்தலுக்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தலைப்பு 281 இன் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்தும் தலைப்பு 226 வவுனியா மாவட்ட செயலகத்திலிருந்தும் முறையே ரூபா 7.732 மில்லியன் மற்றும் ரூபா 39.996 மில்லியனாக ரூபா 47.728 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 3.526 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு 16 குளங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்த 16 குளங்களில் 09 இன் வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 15.5 மில்லியன் செலவில் நவீனமயப்படுத்தப்பட்ட கம்பிலியாவ குளத்தில், குளத்தின் அணைக்கட்டில் இடமொன்று உடைந்திருந்ததுடன் அது பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இந்த குளம் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்குரிய சாத்தியவள ஆய்வு அறிக்கையும் செயற்திட்ட அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 செயலாற்றல்

வவுனியா மாவட்டத்தின் தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு குடிநீர் மற்றும் விவசாய நீர் தேவைகளுக்காக 100 கிணறுகளை நிர்மாணிப்பதற்காக 2014 திசெம்பர் 03 ஆந் திகதி வன்னி பாதுகாப்பு தலைமையகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன்படி மாவட்ட செயலகத்தினால் வன்னி பாதுகாப்பு தலைமையகத்திற்கு ரூபா 20 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 மார்ச் 12 ஆந் திகதி வரையிலும் அந்தக் கிணறுகள் நிர்மாணிக்கப்படவில்லை. 2015 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 34 கிணறுகளும், நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற 43 கிணறுகளும், அத்திகதி வரையில் வேலை ஆரம்பிக்கப்படாத கிணறுகளின் எண்ணிக்கை 23 எனவும் அறிக்கையிடப்பட்டிருந்தன.

## 3.8 நிதி மோசடிகளின் வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்தினால் வவுனியா மற்றும் செட்டிக்குளம் பிரதேச செயலாளர்களுக்கு ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ரூபா 42.135 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. உரிய பிரதேச செயலாளர்களினால் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களுக்குரிய சமூர்த்தி வங்கிக்கு ஒவ்வொரு நலனாளிகளும் இனங்காணப்பட்டதன் பின்னர் (நலனாளிகளின் பெயர்ப்பதிவேட்டின் படி) செலுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆலோசனைகளுக்கு முரணாக வவுனியா மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளரின் வாய்மொழிமூல ஆலோசனைகளின் அடிப்படையில் சங்க அமைப்புக்களுக்கு நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு செலுத்தப்பட்டமையின் காரணமாக நிதி ரீதியான மோசடிகள் ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்டிரந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் அதற்குரிய நலனாளிகளுக்கு கொடுப்பனவு செய்யும் போதும் மாவட்ட திட்டமிடல் பிரிவினால் நலன்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபா 49,000, ரூபா 10,000, ரூபா 9,000, ரூபா 7,800, ரூபா 6,500 மற்றும் ரூபா 2,500 என்ற வகையில் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட பணம் பொது 36(அ) படிவத்தில் கையொப்பம் பெறப்பட்டு நலனாளிகளுக்குச் செலுத்தப்படடிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது, பொது 36(அ) படிவத்தில் கையொப்பமிடப்பட்ட தொகைக்கு குறைவாக நலன்கள் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் காதர்சின்னக் குளம் கிராமத்தில் 06 நபர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்ட ரூபா 60,000 தொகையொன்று அதன் படி அவர்களுக்கு செலுத்தப்படாது நிதி ரீதியான மோசடிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 3.9 நட்டமும் இழப்பும்

---------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கு அங்கீகாரம் பெறப்பட்ட 2 வாகன விபத்துக்களை உள்ளடக்கிய ஏனைய 4 பல்வேறு நட்டங்களும் இழப்புக்களும் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் 20 கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் Floor Polisher, Camera, கதிரை மற்றும் மேசைகள் உள்ளடங்கலாக 22 பொருள் வகைகளின் குறைவு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் பயன்படுத்தப்படாத நிலைக்குள்ளாகிய குளங்களை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்குரியதாகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,045,031 பெறுமதியான வாயிற்கதவு மற்றும் உப பாகங்களின் ரூபா 406,258 பெறுமதியான உப பாகங்கள் அந்த குள செயற்திட்டத்திற்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் பாவனைக்கு எடுக்காத உப பாகங்கள் பிரதேச செயலகங்களின் பொறுப்பில் வைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த உப பாகங்களுக்கிடையே ரூபா 194,880 பெறுமதியான செயற்திட்டத்திற்குரித்தற்ற உபகரணங்களும் (Guide Brackets) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------------

கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைத்த நிதியேற்பாட்டின் மூலம் 49 தையல் பயிற்சியளிக்கும் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்த பயிற்சியளித்தல் நிலையத்திற்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் மற்றும் உப பாகங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாவலரும், மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பாதுகாப்பு சேவையில் ஈடுபட்ட நபர்களும் அந்தச் சேவையில் ஈடுபடாதிருந்தமையும், தனியார் வீடுகளில் நடாத்தப்பட்ட நிலையங்களுக்கு பாதுகாவலர்களை ஈடுபடுத்துதல் அவசியமற்றது எனக் குறிப்பிடப்பட்டமையால் அதற்காக செலவிட்ட ரூபா 1,245,567 தொகை சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலொன்றாக இருந்தது.

### 3.12 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

---------------------------------------------------------------

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளிலிருந்து சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக மாவட்ட செயலகத்தினால் தீர்வு காணப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2005 – 2013 | 2.2 (ஈ) | பொது வைப்புக் கணக்குகள் |
| 2013 | 1.5 (அ) | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை |

## 3.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 17 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 07 | 08 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 324 | 224 | 100 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 66 | 55 | 13 | 02 |
| | மொத்தம் | 425 | 303 | 124 | 02 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் 124 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

(ஆ) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.